# INDIAN SCHOOL SALALAH

# ACADEMIC YEAR 2026 – 2027

| | | | |
|---|---|---|---|
| Roll No: | | Assessment Type: **FIRST TERM EXAMINATION SEPTEMBER - 2026** | |
| Name of the Student: | | | |
| Grade: **V** | Section: **I** | Marks Obtained: | /40 |
| Subject: **TAMIL** (Second language) | | | |
| Date of Assessment: **21.09.2026** | | Time: **2Hours** | Examiner's Signature: |
| Invigilator's Signature: | | Checker's Signature: | |

***General Instructions:***

- This question paper contains **7** questions in **6** pages.
- Marks are indicated against each question.

**பகுதி (அ)** (**படித்தல்**) - **READING**

**1.கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.** **5X1=5**

சிங்கப்பூரில் உலக சதுரங்க வகையார் (உலக செஸ் சாம்பியன்ஷிப்) 2024 தொடர் நடைபெற்றது. இத்தொடரில் இந்தியா அணியின் இடம்பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த குகேஷ் வெற்றி பெற்றார். மேலும் இளம் வயதில் உலக சதுரங்க வாகையர் பட்டத்தை வென்ற வீரர் என்ற சாதனையையும் படைத்துள்ளார். குகேஷ் இச்சாதனையை 18 வயதில் படைத்தார். இவர் பள்ளி வயது முதலே சதுரங்கம் விளையாடி வருகிறார். இப்பட்டத்தைப் பெற்ற முதல் இந்தியர் திரு. விஸ்வநாதன் ஆனந்த் ஆவார். அதற்கு அடுத்த பத்து ஆண்டுகளுக்குப் பிறகு குகேஷ் இப்பட்டத்தைப் பெற்றுள்ளார். தனியாத ஆர்வத்தாலும் முறையான பயிற்சியாலும் கடின உழைப்பாலும் இவ்வெற்றியைப் பெற்றதாகக் குகேஷ் குறிப்பிடுகிறார்.

**<u>வினாக்கள்</u>**

1. **குகேஷ்** பட்டம் பெற்ற விளையாட்டின் பெயர் ____________________________

அ) சதுரங்கம் ஆ) மட்டைப்பந்து இ) கால்பந்து ஈ) கபடி

2. உலக சதுரங்க வகையார் பட்டம் வென்ற **முதல் இந்தியர்** ________________________

அ) குகேஷ் ஆ) மாரியப்பன் இ) விஸ்வநாதன் ஆனந்த் ஈ) மல்லேஸ்வரி

3. உலக செஸ் சாம்பியன்ஷிப் தொடர் ________________________ நடைபெற்றது.

அ) மலேசியா ஆ) சிங்கப்பூர் இ) சென்னை ஈ) தமிழ்நாடு

4. குகேஷ் ___________________ நாட்டை சேர்ந்தவர்.

அ) தமிழ்நாடு ஆ) சென்னை இ) மதுரை ஈ) கொழும்பு

5. குகேஷ் இச்சாதனையை ------------------------- வயதில் படைத்தார்.

அ) 10 ஆ) 15 இ) 16 ஈ) 18

**பகுதி (ஆ) (இலக்கணம்) - GRAMMAR**

**2. சான்று தருக.** **5X1=5**

1. பெயர்ச்சொல்லுக்கு சான்று ___________________.

அ) படித்தான் ஆ) ஆடினாள் இ) வகுப்பறை ஈ) கை

2. வினைச்சொல்லுக்கு சான்று ___________________.

அ) ஆடினாள் ஆ) சாந்தி இ) பறவை ஈ) புல்

3. முன்னிலைக்கு சான்று ________________

அ) நாம்,நாங்கள் ஆ) நீ,நீங்கள் இ) அவன்,அவள் ஈ) அது,இது

4. **தென்றல் நடனம் ஆடினாள்.** இத்தொடரில் எழுவாய் எது? ______________

அ) தென்றல் ஆ) நடனம் இ) ஆடினாள் ஈ) ஓடினாள்

5. **பாடல் பாடினாள்-** இத்தொடரில் ________________ இல்லை.

அ) எழுவாய் ஆ) பயனிலை இ) செயப்படுபொருள் ஈ) சொல்

3. **நிரப்புக.** **5X1=5**

1. எழுவாய் என்பது ______________ ஆகும்.

   அ) வினைச்சொல் ஆ) இடைச்சொல் இ) பெயர்ச்சொல் ஈ) உரிச்சொல்

2. ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் எனப்படும். ______________

   அ) பெயர்ச்சொல் ஆ) இடைச்சொல் இ) உரிச்சொல் ஈ) பயனிலை

3. ஒரு தொடரை முழுமை பெறச்செய்யும் சொல்லையே ________என்கிறோம்.

   அ) செயப்படுபொருள் ஆ) பயனிலை இ) எழுவாய் ஈ) பெயர்ச்சொல்

4. ஒரு செயலை குறிக்கும் சொல் ______________ எனப்படும்.

   அ) பெயர்ச்சொல் ஆ) உரிச்சொல் இ) எழுவாய் ஈ) வினைச்சொல்

5. பேசுபவரை அல்லது தன்னைக் குறிப்பது ______________ எனப்படும்.

   அ) முன்னிலை ஆ) படர்க்கை இ) தன்மை ஈ) உயர்திணை

4. **பின்வரும் பாடப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.** **7X1=7**

"வாருங்கள் **அய்யா"** என்று வீட்டில் இருந்தவர்கள் **வரவேற்றனர்**. **சிறுமியும் புன்னகை**யுடன் வரவேற்றாள். **"உங்களால் என்** குழந்தையும் பிற குழந்தைகளும் **ஊட்டச்சத்து** பெறுகிறார்கள். நன்றி. **நீங்கள்** மிகவும் உயர்ந்தவர்" என்று சிறுமியின் தாய் நன்றி **கூறினார்."நானா** உயர்ந்தவர்? இல்லை. நானோ **என்னிடம்** இருப்பதில் சிறிது உதவி **செய்கிறேன்.** ஆனால், **உங்கள் குழந்தை** இந்த வயதில் பொறுப்புடன் இருக்கிறாள். பிற குழந்தைகளுக்குக் கொடுத்த பின்பே **தனக்கு** எடுத்துக் **கொள்கிறாள்.** அவளல்லவோ உயர்ந்தவள். அவளைப் பாராட்டவே **நான்** இங்கு **வந்தேன்,"** என்றார். சிறுமிக்கும் குடும்பத்தினருக்கும் ஒரே மகிழ்ச்சி. "உன்னுடைய பெயர் **அன்பரசி**யாமே? **இதோ** உனக்கு ஏற்றாற்போல் ஓர் **அன்புப்பரிசு"** என்று தன்கையிலிருந்த படக்கதைப்

புத்தகத்தைச் சிறுமிக்குப் பரிசாக அளித்தார் **பெரியவர்.** அன்பரசிக்கு மிகுந்த மகிழ்ச்சி படக் கதையைப் படிப்பதில் பேரார்வம் உண்டு அவளுக்கு. இனி என்ன? **அதோ**! **அவள்** படக்கதையைப் படிக்கத் தொடங்கி விட்டாள் .

| | |
|---|---|
| **பெயர்ச்சொல்** | 1. ________________ 2. ________________ |
| **வினைச்சொல்** | 1. ________________ 2. ________________ |
| **தன்மை** | 1. ________________ 2. ________________ |
| **முன்னிலை** | 1. ________________ 2. ________________ |
| **படர்க்கை** | 1. ________________ 2. ________________ |

## பகுதி (இ) (இலக்கியம்) - LITERATURE

**5. பின்வரும் பாடலை படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.** **5X1=5**

**எல்லை அறியாய் பெருங்கடலே - நீதான்**
**இரவும் உறங்காயோ? கடலே**
**அல்லும் பகலும் அலைகடலே - உனக்கு**
**அலுப்பும் இலையோ கருங்கடலே**
**பொங்கும் திரைகளோ? கடலே - அவை**
**புரவி நிரைதாமோ? கடலே**
**எங்கும் உனதொலியோ? கடலே! - அன்றி**
**இடியின் முழக்கமோ? கடலே!** **- கவிமணி தேசிக விநாயகனார்.**

**வினாக்கள்**

1. **அலுப்பு** என்பதன் பொருள். ____________________

   அ) களைப்பு ஆ) மகிழ்ச்சி இ) சாந்தம் ஈ) உழைப்பு

2. மழை நீரைச் சேமித்துவைக்கும் பெரிய காலனாக இருப்பது.________________

   அ) வானம் ஆ) பூமி இ) கடல் ஈ) நெருப்பு

3. இப்பாடலை பாடியவர். ______________________________

   அ) கவிமணி ஆ) பாரதிதாசன் இ) வீரமணி ஈ) பாரதியார்

4. **புரவி** என்பதன் பொருள். ______________________

   அ) குதிரை ஆ) யானை இ) புலி ஈ) சிங்கம்

5. **பெருமை + கடல்** என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது. ____________________

   அ) பெருமைகடல் ஆ) பெருங்கடல் இ) பெரியகடல் ஈ) பெருமைக்கடல்

6. **சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.** **5X1=5**

1. **மரப்பொந்து** இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது. ______________________

   அ) மரம் + பொந்து அ) மர + பொந்து இ) மரப் + பொந்து ஈ) மரப்பு + பொந்து

2. **அறிவிலர்** என்பதன் எதிர்ச்சொல். ________________________

   அ) அறிவுடையவர் ஆ) படிக்காதவர் இ) அறியாதவர் ஈ) அறிவில்லாதவர்

3. **மடை + தலை** என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது. _________________________

   அ) மடைதலை ஆ) மடைத்தலை இ) மடத்தலை ஈ) மடதலை

4. **எள்ளுவர்** இச்சொல்லுக்குரிய பொருள். ______________________________

   அ) வாழ்த்துவர் ஆ) புகழ்வர் இ) இகழ்வர் ஈ) ஏற்றுவர்

5. தொலைக்காட்சி இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.______________________

   அ) தொலைக் + காட்சி ஆ) தொலை + காட்சி இ) தொ + காட்சி

   ஈ) தொடர் + காட்சி

7. **பின்வரும் வினாக்களுக்கு விடையளி.** **4X2=8**

1. **கொக்கு எதற்காகக் காத்திருக்கிறது**?

2. **களர்நிலத்துக்கு ஒப்பாவார் - யார்**?

3. **கிளி**, **யாருக்கு மாம்பழம் தருவதாக கூறியது**?

4. **கடல் நமக்கு அளிக்கும் வளங்கள் யாவை**?

************************************************************